**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**...**
**IN THE COURT OF District Munsif Cum Judicial Magistrate Court, Shencottai**
**STC No. 306/2023**

Deposition of the witness for Prosecution **PW** 1
Name : ராமதாஸ்

Father's/Husband's Name :

Age :
Village and Taluk :
Caste and Religion :
Calling :
Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on (09.10.2025)

Accused absent, petition filed and allowed.

<u>சாட்சி மனுவின்பேரில் மீண்டும் வரவழைக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்யப்பட்டார்</u>

வழக்கின் எதிரி இன்ஷால் பேகத்திற்கு எப்போது திருமணம் நடந்தது, எத்தனை குழந்தைகள் உள்ளது என்ற விவரம் எதுவும் எனக்கு தெரியாது என்றால் சரிதான், இரண்டு குழந்தைகள் உள்ள விவரம் எனக்கு தெரியும். அவரது குடும்ப நிகழ்ச்சிக்கு என்னை அழைத்ததுண்டா என்றால் இல்லை. எங்களது வீட்டு குடும்ப நிகழ்ச்சிக்கு எதிரியை அழைத்ததுண்டா, அவர் கலந்து கொண்டாரா என்றால் இல்லை. நான் ராணுவத்திலிருந்து எப்போது ஓய்வு பெற்றேன் என்றால் 2018 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஓய்வு பெற்றேன். ராணுவத்திலிருந்து நான் ஓய்வு பெறும்பொழுது எனக்கு எவ்வளவு தொகை கொடுத்தார்கள் என்றால் ரூ.68,00,104/- (அறுபத்து எட்டு லட்சத்து நூற்று நான்கு ரூபாய்). மூன்று காசோலை வழக்குகளிலும் நான் பணம் கொடுத்ததாக சொல்லப்படும் மொத்ததொகை எவ்வளவு என்றால் தர்வீஸ் மைதீனுக்காக ரூ.20 லட்சம், இன்ஷால் பேகத்திற்கு ரூபாய் 21 லட்சம், முகமது நவாசுக்கு ரூ.பத்தரை லட்சம். ஆகமொத்தம் ரூபாய் 51-1/2 லட்சம் (ஐம்பத்தி ஒன்றரை லட்சம்) கடன் கொடுத்ததாகத்தான் மூன்று வழக்குகளும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

இந்த வழக்கில் எதிரி இன்ஷால் பேகம் எனக்கு நேரடியாக அறிமுகம் இல்லை, நான்

பார்த்தது இல்லை என்றால் சரியல்ல. கதவு எண். 65 நாயுடு தெரு புளியரை என்ற இடத்தில் அமைந்துள்ள வீடு தாங்கள் ஓய்வு பெற்ற பின்பு கட்டப்பட்ட புதிய வீடு என்றால் இல்லை. அது பழைய வீடு, பூர்வீக சொத்தாகும். ஓய்வு பெற்ற பின்பு அந்த வீடு புதுப்பிக்கப்பட்டது என்றால் இல்லை. இந்த மூன்று வழக்குகளிலும் தாக்கல் செய்துள்ள காசோலையில் கையொப்பம் தவிர காசோலையின் ஏனைய பகுதிகள் அனைத்தும் ஒரே நபரால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கின் எதிரி எனது நண்பர் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. 01.03.2020 அன்று வழக்கின் எதிரி தனது மகளின் திருமணம் மற்றும் அவசர தேவைக்கு தங்கள் வீட்டில் வைத்து கைமாற்றாக பணம் பெற்றதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் தாங்கல் தாக்கல் செய்துள்ள காசோலையை எதிரிக்கு எந்த முன்அறிவிப்பும் கொடுக்காமல் வங்கியில் செலுத்தி பணம் பெற முயற்சித்துள்ளேன் என்றால் சரியல்ல எதிரிக்கு தெரியும். இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள காசோலை எனது நண்பர் மகேந்திரன் என்பவர் மூலம் எனக்கு கிடைக்கப்பெற்றது என்றால் சரியல்ல.

எதிரிக்கு ரூ.21,00,000/- (இருபத்தோரு லட்சம்) கைமாற்றாக கடன் கொடுத்ததாக சொல்லக் கூடிய நேரத்தில் எதிரி பணம் பெற்றதற்காக நான் எந்தவித ஆவணமும் கேட்டு பெறவில்லை என்றால் ஆவணம் கொடுத்தார். எதிரி வீட்டின் குத்தகை ஒப்பந்த பத்திரம் அசல் என்னிடம் கொடுத்தார். இந்த வழக்கின் எதிரி இன்ஷால் பேகத்தின் கணவர்தான் தர்வீஷ் மைதீன் என்றால் சரிதான். குத்தகை பத்திரம் எழுதி தருவதற்கு அந்த இடம் எதிரிக்கு பாத்தியப்பட்டதுதான என்று நான் தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன் கணவர் தர்வீஸ் மைதீன் பெயரில் தான் அந்த வீடு உள்ளது. அந்த வீட்டை தர்வீஸ் மைதீனுக்கு கடன் கொடுத்ததாக சொல்லக்கூடிய காலகட்டத்தில் கிரைய ஒப்பந்தம் எழுதி கொடுத்ததாக ஒரு ஆவணம் என் கைவசம் உள்ளது என்றால் சரிதான். வீட்டை எழுதி கொடுப்பதாகத்தான் கடன் பெற்றார்கள். எதிரி தர்வீஸ் மைதீனோ, இன்ஷால் பேகமோ என் கைவசம் உள்ள எந்த ஆவணமும் நேரடியாக எழுதி கொடுக்கவில்லை,

மகேந்திரன் என்பவர் மூலம் இந்த வழக்கின் எதிரிக்கு திருமண செலவிற்காக எழுதப்படாதா ஆவணத்தில் பெறப்பட்ட கையெழுத்துக்கள் என்றால் சரியல்ல. அவர்கள் எழுதிதான் என் முன்பாக கையொப்பம் செய்தார்கள். தர்வீஸ்மைதினோ, இந்த வழக்கின் எதிரி இன்ஷால் பேகமோ நான் சொல்வதுபோல் எந்த ஆவணமும் பிறப்பித்து கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் தனித்தனியாக ஆவணங்கள் பிறப்பித்துக்கொடுத்தார்கள்.

01.03.2020 அன்று இந்த எதிரிக்கு கடன் கொடுத்ததாக சொல்லப்பட்ட பின்னர் கொடுத்த கடனை திருப்பி கேட்டதாக எனது அறிவிப்பிலும், புகாரிலும், முதல் விசாரணை சாட்சியத்திலும் சொல்லவில்லை என்றால் சொல்லவில்லை. 25.01.2023 அன்று தேதியிட்ட காசோலை எனது கைக்கு கிடைக்கப்பெற்ற போது காசோலை வேண்டாம் எனக்கு ரொக்கமாக தாருங்கள் என்று கேட்டேனா என்றால் கேட்டேன். அவ்வாறு காசேலை வேண்டாம், ரொக்கமாக தாருங்கள் என்று கேட்டதாக புகாரிலோ, வழக்கறிஞர் அறிவிப்பிலோ, முதல் விசாரணை சாட்சியத்திலோ சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை.

நான் சொன்ன தேதியில் எதிரிக்கு தொகை எதுவும் கொடுக்காதால், வழக்கிற்காக ஆவணம் கொடுத்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 25.01.2023 தேதியிட்ட காசோலையை அன்றே நான் வசூலுக்கு செலுத்திவிட்டேன் என்றால் சரிதான். 25.01.2023 தேதியிட்ட காசோலை 20.01.2023 அன்று எனது கைக்கு கிடைக்கப்பட்டது என்றால் சரிதான். 25.01.2023 அன்று வழக்கில் கண்டுள்ள காசோலையை எனது வங்கி கணக்கில் செலுத்தி பணம் பெற்றுக்கொள்ள எதிரி எனக்கு அறிவுரை எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. அவர் சொல்லித்தான் செலுத்தினேன். இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள காசோலையின் அடிப்படையில் வழக்கின் எதிரி காசோலையில் கண்டுள்ள தொகையை தாரேன் என்று சொல்லிவிட்டு தர மறுத்துவிட்டார் என்றால் சரிதான். வழக்கில் தாக்கல் செய்துள்ள காசோலையின் அடிப்படையில் எனக்கு எதிரி சட்டப்படி பணம் கொடுக்க வேண்டியது இல்லை

என்பதால் காசோலை மதிப்பிழக்கப்பட்டது என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கில் எதிரிக்கு அனுப்பிய அறிவிப்பு Unclaimed என்ற மேலெழுத்துடன் திருப்பி எனது கைக்கு கிடைக்கப்பெற்றது என்றால் வழக்கறிஞருக்கு கிடைக்கப்பெற்றது. எதிரிக்கு சரியான முறையில் அறிவிப்பு அனுப்பப்படவில்லை என்றால் சரியல்ல.

வழக்கில் தாக்கல் செய்துள்ள காசோலை எதிரி என்னிடம் நேரடியாக கொடுத்தது இல்லை என்றால் சரியல்ல. நேரடியாக கொடுத்தது தான். மகேந்திரா எக்ஸ்போர்ட் என்ற நிறுவனத்தை வைத்துள்ளவர் எனது நண்பரா என்றால் நண்பராக இருந்தார். வழக்கு எண் 306/2023 குற்றம் சாட்டப்பட்டுள்ள இன்ஷால்பேகம் என்ற பெண்மணிக்கு அவரது வீட்டு திருமணத்திற்கு எனது நண்பர் மகேந்திரன் என்பவர் மூலம் ரூபாய் 10 லட்சம் கடனாக நான் கொடுத்தேன் என்றால் சரியல்ல. இன்ஷால் பேகத்திற்கு நான் மொத்தம் ரூபாய் 21 லட்சம் கொடுத்துள்ளேன். ரொக்கமாக ரூபாய் 11 லட்சமும், ரூபாய் 10 லட்சம் அவர் வங்கி கணக்கில் வாங்கி உள்ளார். இன்ஷால்பேகம் என்பவரது வங்கி கணக்கிற்கு நான் ரூபாய் 10 லட்சம் அனுப்பியதற்கு காட்டக்கூடிய ஆவணம் என் கைவசம் உள்ளது என்றால் உள்ளது. அந்த ஆவணத்தின் நகலை வழக்கு எண். 306/2023 வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். நான் பத்து லட்சம் ரூபாயை இன்ஷால் பேகத்திற்கு கொடுப்பதற்காக மகேந்திரன் என்பவரிடம் ரொக்கமாக கொடுத்து, அந்த பணத்தை மகேந்திரன் தனது வங்கி கணக்கு மூலம் இன்ஷால்பேகத்திற்கு அனுப்பி வைத்தார் என்றால் இல்லை. எனது வங்கி கணக்கில் இருந்துதான் நான் இன்ஷால்பேகத்திற்கு அனுப்பி உள்ளேன்.

இன்ஷால்பேகம் குடும்பத்தில் அவரது வாரிசுக்கு எப்போது திருமணம் நடைபெற்றது என்று எனக்கு தெரியுமா என்றால் நான் பணம் கொடுத்த அந்த மாதத்தில் தான் திருமணம் நடைபெற்றது. 01.03.2020 தேதிக்கு பிறகு. அந்த திருமணத்திற்கு எனக்கு அழைப்பு கொடுத்தார்களா என்றால் இல்லை. நான் மகேந்திரன் மூலம் கொடுத்த ரூபாய் 10 லட்சத்தை, ரூபாய் 5 லட்சத்தை இன்ஷால்பேகத்தினுடைய உறவினர் ரம்ஜான் பேகம் என்பவர் எனது வங்கிக் கணக்கிற்கு

26.03.2020 அன்று கடன் தொகையை திருப்பி செலுத்தும் பொறுப்பு எனக்கு வங்கியில் அனுப்பி இருந்தார் என்றால் இல்லை. அனுப்பவில்லை. மீதமுள்ள கடன் தொகையினை இந்த வழக்கின் எதிரி இன்ஷால்பேகம் சார்பாக நீதிமன்றத்தில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்ட பின்னர் 24.01.2025-க்குள் ரூபாய் 5,25,000/- (ஐந்தே கால் லட்சம்) செலுத்தினார் என்றால் இல்லை. முகமது நவாஸுக்கு நான் கொடுத்த பணத்தை தான் அவர் திருப்பித் தந்தார்.

வழக்கு எண்கள் 304, 305, 306 ஆகியவைகளில் நான் தாக்கல் செய்துள்ள காசோலைகள் அனைத்தும் இன்ஷால்பேகத்திற்கு மகேந்திரன் மூலமாக கடன் கொடுத்த போது வழங்கப்பட்ட ஆவணங்கள் என்றால் சரியல்ல. நான் நேரடியாக பணம் கொடுத்தேன். அந்த காசோலைகள் அனைத்தையும் நான் பயன்படுத்தி மூன்று தனித்தனி வழக்குகளாக இன்ஷால்பேகம், தர்வீஸ் மைதீன் மற்றும் முகமது நவாஸ் ஆகியோர்கள் மீது அதிக பணம் பெற வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தின்பேரில் பொய்யான தகவலின் பெயரில் வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் கண்டுள்ள காசோலையின் அடிப்படையில் எதிரி எனக்கு சட்டப்படி கடன் பெறுவது தொகை எதுவும் செலுத்த வேண்டியது இல்லை என்றால் சரியல்ல. இந்நீதிமன்றத்தில் ஒப்புக்கொண்டு தான் பணத்தை கொடுத்துள்ளார். நான் உண்மைக்கு மாறாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me / before me in Open court, interpreted/ read over to the witness, and admitted by the deponent to be correct.

S ILAIYARAJA Digitally signed by S ILAIYARAJA Date: 2025.10.09 16:01:39 +0530

District Munsif cum Judicial Magistrate,
Shenkottai